ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2202/25 - 2020 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2020.11.20
*2202/25 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் முறையே 44(1), 45(1) மற்றும் 47 (1) (அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2020, ஒகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது 2020, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, நவெம்பர் 20,

1A - G 33240 — 385 (2020/11)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(1) அவ்வறிவித்தலில் "சனாதிபதி அலுவலகம் - தேசிய முன்னுரிமை"எனும் தலைப்பின் கீழுள்ள"01. விடய எல்லை 02. கடமைகளும் பணிகளும் 03. அதிவிசேட முன்னுரிமைகள் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு-

**01. விடய எல்லை**

உற்பத்திப்பெருக்கமிக்க மக்கள்மையமான சேவைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதலும் வறுமையை ஒழித்துக்கட்டி, கட்டுக்கோப்பான ஒரு நாட்டை உருவாக்குவதற்காகப் பொருளாதார மற்றும் சமூகரீதியில் ஊக்குவிப்பதற்கான நிலையான முதலீடுகளுடன்கூடிய உபாயமுறையிலான அணுகுமுறைகளை நோக்கித் தேசியரீதியில் வழிகாட்டுதல்.

**02. விடயங்களும் பணிகளும்**

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைவாக மற்றும் அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படையின்பேரில் தாபிக்கப்பட்ட சனாதிபதி செயலணிகளதும் பங்களிப்பைப் பெற்றுக்கொண்டு தொடர்புடைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து மற்றும் உரிய சட்டதிட்டங்களுக்கமைவாகப் பின்வரும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் சபைகளையும் மேற்போந்த செயலணிகளையும் உத்தேச இலக்குகளை நோக்கி வழிநடத்துதலும் கண்காணித்தலும் தொடராய்வு செய்தலும்.

**03. தேசிய முன்னுரிமைகள்**

1. தேசியப் பாதுகாப்பு, கொவிட்-19 தொற்றுநோய் பரவும் ஆபத்தை ஒழித்தல், போதைப்பொருட்களை ஒழித்துக்கட்டுதல், தொல்பொருள்களைப் பேணிக்காத்தல், கல்விச் சீர்த்திருத்தங்கள், வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதாரப் புத்தெழுச்சி என்பன சார்பில் உள்ள சனாதிபதி செயலணிகளுடன் இணைந்து சகல அமைச்சுக்களும் தமது விடயத்துறைகளுக்குரிய பணிகளை ஒருங்கிணைத்தலும், செயற்படுத்துதலும்.

2. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வறுமையை ஒழித்துக்கட்டி அனைத்துக் கட்சிகளுக்கும் நலன்கிடைக்கும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உற்பத்தி பொருளாதாரத்திற்காக உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டு வசதிகளை விரிவாக்குதல்.

3. கொழும்பு, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளை பல்துறை தேசிய மற்றும் சர்வதேச மத்திய நிலையங்களாகவும் கண்டி, அநுராதபுரம், கம்பஹா, இரத்தினபுரி, காலி, பதுளை, மன்னார், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளை தேசிய நிலையங்களாகவும் அபிவிருத்தி செய்வதன் மூலம் ஒட்டுமொத்த தேசிய பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான வேறு அபிவிருத்தி மையங்களை விரிவாக்குதல்

*04. தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்*

| நிறுவனங்கள் /சபைகள் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை முதலீட்டுச் சபை<br>2. கொழும்பு துறைமுக நகரக் கருத்திட்டம்<br>3. முப்படை உறுப்பினர்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காக அனைத்துப் படைகளினால் எடுக்க வேண்டிய செயன்முறைகளை கற்றாராய்ந்து சொல்லப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்குவதற்கான சனாதிபதி செயலணி<br>4. பாதுகாப்பான நாடு, ஒழுக்கப் பண்புமிக்க, குணநெறிமிக்க சட்டத்தை மதிக்கும் சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணி<br>5. கொவிட் 19 அமைச்சுக்களின் செயலணி<br>6. கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமையை முகாமைத்துவம் செய்வதற்கான சனாதிபதி செயலணி<br>7. இலங்கை கல்வி நடவடிக்கைகள் தொடர்பான சனாதிபதி செயலணி<br>8. பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான சனாதிபதி செயலணி | • பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுச் சட்டம் (முதலீட்டுச் சட்டம்) (1978 இல. 4) |

(2) அவ்வறிவித்தலில் இல."1.0 பாதுகாப்பு அமைச்சர்"எனும் தலைப்பின் கீழுள்ள "01. விடய எல்லை 02. கடமைகளும் பணிகளும் 03. அதிவிசேட முன்னுரிமைகள் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு-

*1.0 பாதுகாப்பு அமைச்சர்*

*01. விடய எல்லை*

தேசியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதை முன்னுரிமையாகக்கொண்டு இலங்கையை இறைமைபொருந்திய ஒற்றையாட்சி நாடாக மக்களின் அபிலாஷைகளைக் கட்டிக்காத்து உறுதிப்படுத்துதல்.

*02. கடமைகளும் பணிகளும்*

1. 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாகவும் அரசினால் செயற்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கைகளுக்கு அமைவாகவும் "பாதுகாப்பான நாட்டினை" உருவாக்குவதற்காக உரிய இராஜாங்க அமைச்சுக்களுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளுக்கு அமைய பாதுகாப்பு விடயத்துடன் தொடர்பான கொள்கையாக்கங்கள், தேசிய வரவு செலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி எனும் வேலைத்திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை ஆக்குதலும் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்.

2. தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

3. நாட்டின் இராணுவப் பாதுகாப்பினைப்போன்று இராஜதந்திர ரீதியான பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதோடு குற்றங்கள், போதைப்பொருள், பணமோசடி மற்றும் ஊழல்களிலிருந்து நாட்டை மீட்டுக் கொள்வதற்குத் தேவையான சகல பணிகளையும் மேற்கொள்ளுதல்.

4. அரசாங்க மற்றும் தனியார் பொருளாதாரச் செயற்பாடுகள்போன்று உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புக்களை விரிவாக்கும் பாதுகாப்புச் சூழலொன்றையும் நாட்டினுள் உருவாக்குதல்.

03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. உள்நாட்டுக் கலவரங்கள், பயங்கரவாதச் செயற்பாடுகள் என்பவற்றைத் தடுத்தல் மற்றும் வெளித் தாக்கங்களிலிருந்து பாதுகாத்தல்.

2. கடல் எல்லைகளை மீறிச் செய்யப்படும் சட்டவிரோத பொருள்களை கடத்தல் மற்றும் சேவைகளைத் தடுத்தல்.

3. போதைப்பொருள் இடையூறிலிருந்து விடுபட்டதொரு நாட்டை உருவாக்குவதற்காகப் போதைப்பொருட்கள் இந்நாட்டுக்கு உள்வருவதைத் தடுத்தல், போதைப்பொருள் இடையூறைக் கட்டுப்படுத்தல், போதைப்பொருள் இடையூறுகளுக்குப் பலியாவதைத் தடுத்தல், போதைப்பொருள்கள் இடையூறுகளுக்கு ஆளானவர்களுக்குப் புனர்வாழ்வளித்தலுடன் தொடர்பான சனாதிபதிச் செயலணியுடன் இணைந்து செயற்படுதல்.

04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. பாதுகாப்பு பதவிநிலைத் தலைவரின் அலுவலகம்<br>2. இலங்கைத் தரைப்படை<br>3. இலங்கைக் கடற்படை<br>4. இலங்கை வான்படை<br>5. அரச புலனாய்வுச் சேவை<br>6. இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்<br>7. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்<br>8. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரி<br>9. தேசிய பயிலிளவல் சிறப்பணி<br>10. மிலோதா நிறுவனம் (ACADEMY OF FINANCIAL STUDIES) கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமாக | • (2009ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம்<br>• தரைப்படைச் சட்டம் (1949 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க)<br>• கடற்படைச் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க)<br>• வான்படைச் சட்டம்(1949 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க)<br>• (2009ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டம்<br>• (1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) புறத்தொப்படைத்தல் சட்டம்<br>• (2008ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) வெடிப்பொருட்கள் சட்டம்<br>• (1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுடுபடைக்கலன்கள் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) துப்பாக்கிச்சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்<br>• (1985ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) பயன்பாடுகள் மற்றும் குறைநிரப்புச் சட்டம்<br>• (1966ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்<br>• (2001ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) கடற்கொள்ளைச் சட்டம்<br>• (1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்<br>• (1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க)பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 68ஆம் இலக்க) சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்புப் பயிற்சிக் கல்லூரிச் சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களை அடக்குதல் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க) கடல்சார் கடற்செலவின் பாதுகாப்புக்கெதிரான சட்டமுறையற்ற செயல்களை அடக்குதல் சட்டம் |

(3) இல."1.1 தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பின் கீழுள்ள "01. கடமைகளும் பணிகளும் 02. அதிவிசேட முன்னுரிமைகள் 03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு;

**1.1 தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

1. பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் ''பாதுகாப்பான நாட்டை'' உருவாக்குவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளுக்கு அமைய தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவியளித்தல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தல் தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.

**02. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின்மூலம் மேற்கொள்ளப்படும் மக்களை மையமாகக்கொண்ட சேவைகளை வலுப்படுத்துதல்.

2. முப்படைகளில் சேவையாற்றும், ஓய்வுபெற்ற, மரணித்த, வலதுகுறைந்தவர்களின் குடும்பங்கள் தொடர்பான நிர்வாக, வழங்கல்கள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3. அரசசார்பற்ற நிறுவனங்கள், மக்கள் அடிப்படையிலான பங்களிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் சமூகப் பொறுப்புடன் செயற்படுவதற்குத் தேவையான சட்டரீதியான மற்றும் நிறுவனக் கட்டமைப்பினூடாக ஒழுங்குறுத்துகையை வலுப்படுத்துதல்

4. குடிவரவு மற்றும் குடியகல்வு நிருவாக செயற்பாடுகளை நவீனமயப்படுத்தல் மற்றும் வினைத்திறனான சேவையொன்றாக நடாத்திச் செல்லுதல்

5. இயற்கை அனர்த்த ஆபத்துக்களை நேரகாலத்துடன் இனங்காணுதல், அனர்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளுதல், சேதங்களைக் குறைவடையச் செய்தல் மற்றும் சேதங்களுக்கு ஆளானோர்களைப் பலப்படுத்தப்படுவதை செயற்றிறனாக்குவதற்கு அபாய முகாமைத்துவ நிலையங்கள் மற்றும் நிவாரணச் சேவை நிலையங்கள் என்பவற்றைக் கூட்டிணைத்துத் தாபனரீதியான கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்.

6. அனர்த்த நிலைமைகள் பற்றி சீரான முன்மதிப்பீடுகள் செய்யக்கூடியவாறு புதிய தொழில்நுட்பம் மற்றும் அறிவினால் வளிமண்டலவியல் திணைக்களத்தை வலுப்படுத்துதல்.

7. அனர்த்தங்களுக்குப் பாத்திரமான பிரதேசங்கள், தொடர்ந்து அனர்த்தங்களுக்குப் பாத்திரமாகும் ஆபத்துடன்கூடிய பிரதேசங்கள், அனர்த்தங்களுக்கு ஆளான நபர்கள், சொத்துக்கள், வியாபாரங்கள் மற்றும் கமத்தொழில்சார்ந்த காணிகள் முதலிய சகல விபரங்களும் உள்ளடங்கிய "தேசிய அனர்த்த தரவுகள் களஞ்சியமொன்றைத்"தாபித்தல்.

01. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. சகல மாவட்டச் செயலகங்களும் சகல பிரதேச செயலகங்களும்<br>2. பதிவாளர் நாயகத் திணைக்களம்<br>3. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்<br>4. அரச சார்பற்ற அமைப்புகளுக்கான செயலகம்<br>5 அனர்த்த முகாமைத்துவ தேசிய மன்றம்<br>6. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்<br>7. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்<br>8. வளிமண்டலவியல் திணைக்களம்.<br>9. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு<br>10. ரக்னா ஆரக்சன லங்கா லிமிட்டெட்<br>11. இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தைச் செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை<br>12. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை<br>13. பாதுகாப்புச் சேவைகள் பாடசாலை<br>14. தேசிய பாதுகாப்பு நிதியம்<br>15. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்<br>16. இலங்கை தேசியப் பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம்<br>17. இலங்கை தேசியப் பாதுகாப்புக் கல்லூரி<br>18. ரணவிருசேவை அதிகாரசபை<br>19. அப்பி வெனுவென் அப்பி நிதியம் | • (1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) அதிகாரமளித்தல் (பிரதேச செயலாளர்கள்) சட்டம்<br>• (1971ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) விடுமுறைகள் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் கட்டளைச் சட்டம்<br>• (1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) மலைநாட்டு விவாக மற்றும் மண நீக்கற் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) முஸ்லிம் விவாக, மண நீக்கற் சட்டம்<br>• (1907 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டம்<br>• (1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம்<br>• (1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) சாதாரண விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டம்<br>• (1917 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டம்<br>• (2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) காணிகள் (உடமை வழங்குதல் வரையறைச்) சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) தண்டப்பணம் அதிகரிக்கும் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) இரத்துச்செய்ய முடியாத நன்கொடை உரித்துப்பத்திரங்களை நன்றியின்மை காரணமாக இரத்துச்செய்தல் சட்டம்<br>• 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டம்<br>• (1902 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க) அட்டோர்னி தத்துவப் பத்திரம் பதிவுசெய்தலுக்கான கட்டளைச் சட்டம் (122 ஆம் அத்தியாயம்)<br>• (1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க) கொன்சல் காவற் தூதுப் பணிகள் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) இறப்புப் பதிவுசெய்தல் தற்காலிகச் சட்டம்<br>• (2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) இறப்புப் பதிவுசெய்தல் (துற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) உரித்துக்கள் பதிவுச்சட்டம்<br>• (1948 ஆம் ஆண்டில் 20 ஆம் இலக்க) குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்<br>• (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) குடியுரிமைச் சட்டம்<br>• (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இந்திய வம்சாவளி ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்<br>• (1986 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) உள்நாட்டவரல்லா தோருக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) உள்நாட்டவரல்லா தோருக்கு பிரஜாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம் |

| | |
|---|---|
| | • (1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொண்டர் சமூகசேவை அமைப்புக்கள் (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டம்<br>• (2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) இலங்கை அனர்த்த முகாமைச் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) இரசாயன ஆயுதங்கள் சமவாயம் தொடர்பான சட்டம்<br>• (1998ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க) தனியார் பாதுகாப்புமுகவர் நிலையங்கள் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) போதையூட்டும் பொருட்களில் தங்கிவாழும் ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்<br>• தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)<br>• (1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டம்<br>• (2008ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க) அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டம் |

(4) அவ்வறிவித்தலில் இல."2.0 நிதி அமைச்சர்" எனும் தலைப்புக்கு முன்னர் பின்வரும் புதிய தலைப்பும் அதன் கீழுள்ள "01. விடய எல்லை 02. கடமைகளும் பணிகளும் 03. அதிவிசேட முன்னுரிமைகள் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" என்பதைச் சேர்ப்பதன்மூலம்;

**2.0 தொழில்நுட்ப அமைச்சர்**

**01. விடய எல்லை**

உகந்த தகவல் தொழில்நுட்பத்தை தேசிய மற்றும் சர்வதேச மின்னணு இணைப்புகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் சுகாதாரம், கல்வி, நலன்புரி மற்றும் அரச சேவைகளைப் போன்று வர்த்தகத் துறையையும் திறமையாக வழிநடத்தும்பொருட்டு டிஜிட்டல் நிர்வாக சேவையை நிறுவுதல்.

**02. கடமைகளும் பணிகளும்**

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாகவும் அரசினால் செயற்படுத்தப்படுகின்ற தேசியக் கொள்கைகளுக்கு அமையத் தாபிக்கப்பட்ட சனாதிபதி செயலணிகளினதும் பங்களிப்பைப் பெற்றுக்கொண்டு உரிய அமைச்சுக்களின் ஒருங்கிணைப்புடன் மற்றும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளுக்கு அமைய பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் மேற்போந்த செயலணிகளையும்,எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நோக்கி வழிநடத்துதல், மேற்பார்வை மற்றும் தொடராய்வு செய்தலின் மூலம் மக்களை மையமாகக்கொண்ட பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை உருவாக்குதல்.

**03. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. அரசபொறிமுறை மற்றும் வர்த்தகத்துறைகளின் செயற்பாட்டை இலகுபடுத்தி வினைத்திறன்மிக்க அத்துடன் மக்கள்மையமான சேவை வழங்குதலும் அறிவைப் பரிமாறிக்கொள்ளும் கருவியாகத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு டிஜிட்டல் அரசமுறையை விரிவாக்கலும்

2. தேசங்களுக்கிடையிலான இலத்திரனியல் வணிகம் மற்றும் சர்வதேச இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளைத் தாபித்தல்

3. நாடுபூராகவும் தழுவிய அதிவேகத் தரவுகளைப் பரிமாற்றம் செய்யும் தொகுதியொன்றை மற்றும் அதனைச்சார்ந்த நடமாடும் வலையமைப்புத் தொகுதியொன்றைத் தாபித்தல்.

4. தரவுப் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, புலமைச் சொத்துக்களின் உரிமைக்காக நவீன சட்டங்கள் மற்றும் நிறுவன கட்டமைப்பைத் தயாரித்தல்.

5. சுற்றாடலில் உணர்வுபூர்வம், தகவல் தொழில்நுட்பம், அறிவு மற்றும் திறன்கள், சுற்றுலாச் சேவைகள் மற்றும் விளையாட்டுத்துறைகளில் இலங்கையின் முக்கியத்துவத்தை உயரச்செய்து கொழும்பு நகரத்தைச் சர்வதேச வாணிப வர்த்தக மற்றும் நிதிசார் மையமாக அமைப்பதற்காகத் தேவையான சட்டரீதியான அத்துடன் தாபனரீதியான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல்

6. தொழில்நுட்பத் துறையில் ஏற்றுமதிப் பங்களிப்பு மற்றும் தேசிய பொருளாதாரத்தின் அறிவு மற்றும் தொழில் சேவைகளின் பங்களிப்பு விரிவுபடும்வகையில் தொழில் அபிவிருத்தி, தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் துறைசார்ந்த சேவைகளை விரிவுபடுத்துவதன்மூலம் தொழில்நுட்பத் தொழில்சார் பொருளாதாரமொன்றுக்கு மாற்றத்தை ஏற்படுத்துதல்.

7. தொழில்நுட்பத்தை மையமாகக்கொண்ட, முதலீடுகள், வியாபாரங்கள், தொழில்துறை மற்றும் அதைச்சார்ந்த சேவைகளை கைத்தொழிலுக்கு மாற்றுவதன்மூலம் (transition) இளைஞர்களுக்கு அதிக வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களை உருவாக்குவதற்காகத் தொழில்நுட்ப பூங்காக்களை (Techno Park) உருவாக்குதல்.

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| **நிறுவனங்கள் / சபைகள்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்** |
|---|---|
| 1. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இணைந்த நிறுவனங்கள்<br>2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை மற்றும் இணைந்த நிறுவனங்கள்<br>3. இலங்கை கணினி திடீர் பதிலளித்தல் ஒன்றியம்<br>4. இலங்கை ரெலிகொம் கம்பனி மற்றும் அதன் நிர்வாகக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள்<br>5. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்<br>6. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் நெனோடெக்னொலோஜி பிரைவேட் லிமிட்டெட்<br>7. தேசிய விஞ்ஞான, தொழினுட்பவியல் ஆணைக்குழு<br>8. அனைத்துத் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள்<br>9. இலங்கை தரவளவு நிறுவனம்<br>10. ஆட்பதிவுத் திணைக்களம் | • ஸ்ரீலங்கா தொலைத்தொடர்புச் சட்டம் (1991 இல. 25)<br>• தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம் (2003 இல. 27)<br>• இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டம் (2006 இல. 19)<br>• (1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) இலங்கை தரவளவு நிறுவனச் சட்டம்<br>• (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்<br>• (1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் மேம்படுத்துகைச் சட்டம் |

(5) அவ்வறிவித்தலில் இல.“2.0 நிதி அமைச்சர்” எனும் தலைப்பிலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(6) அவ்வறிவித்தலில் இல.“4.1தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலை மற்றும் கிராமிய கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்” எனும் தலைப்பின் கீழுள்ள “02. அதிவிசேட முன்னுரிமைகள் 03.உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்” தொடர்பில் பின்வருமாறு-

**02. விசேட முன்னுரிமைகள்**

1. தேசிய உரிமைகளைப்பாதுகாப்பதற்காகத்தற்போதுள்ள நிறுவனங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

2. அச்சுநூல்கள், நாடகங்கள், திரைப்படங்கள், ஓவியங்கள், சிலைகள், இசை, நடனங்கள் ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

3. தேசியத்துவத்தை முன்னுரிமையாகக்கொண்ட நூலாசிரியர்களின் பதிப்புரிமைகளுக்குச் செலுத்தல்களைச் செய்வதற்காகச் சர்வதேச சமவாயங்களுக்கமைய உரிய பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்.

4. சகல வசதிகளையும் கொண்ட "நாடக மத்தியநிலையமொன்றைத்" தாபித்தலும் கலைஞர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்தலுக்காக வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கான தாபனரீதியிலான கட்டமைப்பொன்றை உருவாக்குதல்.

5. கலைப்படைப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் காட்சிப்படுத்தலுக்கான விசேட வசதிகளை வழங்குதல்.

6. பாரம்பரிய மற்றும் நவீன நடனக்கலைஞர்களின் அருங்கலைகளைக் காட்சிப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஓவியக் கலைஞர்கள் மற்றும் சிலை வடிவமைப்பாளர்கள் ஆகியோரின் படைப்புகளை விற்பனை செய்வதற்காகச் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் மனங்களைக் கவரும்வகையில் அதற்கான இடவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வேலைத்திட்டங்களைச் சுற்றுலா அமைச்சுடன் ஒருங்கிணைந்து செயற்படுத்துதல்.

7. கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான செயலணியுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.

**03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்** |
|---|---|
| 1. டவர்ஹோல் மண்டப தியேட்டர் மன்றம்<br>2. தேசிய கலை மன்றம்<br>3. கிராமோதய ஜனகலா கேந்திரய<br>4. காலி மரபுரிமை மன்றம்<br>5. மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி-சினிமா பூங்கா<br>6. தேசிய நுண்கலைகள் நிலையம் (நெலும் பொக்குண)<br>7. தொல்பொருளியல் திணைக்களம்<br>8. அபே கம - அலுவலக வளவு தவிர | • (1978ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க) டவர் மண்டப அரங்கு நிதியச் சட்டம்<br>• சீகிரிய மரபுரிமை மன்றச் சட்டம் (1998 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க)<br>• காலி மரபுரிமைகள் மன்றச் சட்டம் (1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) காலி உரிமை மன்றம்<br>• (1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) தொல்பொருள் கட்டளைச் சட்டம் |

(7) அவ்வறிவித்தலில் இல."9.3 திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சர்"எனும் தலைப்பின் கீழுள்ள"03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்"தொடர்பில் பின்வருமாறு-

**03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களும் | • (2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொழில், தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டம் |
| 2. தொழில்துறை, தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் | • (2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) இலங்கை சமுத்திர பல்கலைக்கழகச் சட்டம் |
| 3. தேசிய கடற்றொழில் மற்றும் கடல்துறைசார் பொறியியல் நிறுவனம்/சமுத்திரம்சார் பல்கலைக்கழகம்) | • (1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) தேசிய வர்த்தக முகாமைத்துவச் சட்டம் |
| 4. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | • (1995ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம் |
| 5. தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சியளித்தல் அதிகாரசபை | • (1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க)அரச அச்சக நிறுவனச் சட்டம் |
| 6. இலங்கை - ஜேர்மனி தொழினுட்பப் பயிற்சி நிறுவகம் | • (2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) தேசிய புத்தாக்குநர் முகவர் சட்டம் |
| 7. இலங்கை அச்சக நிறுவகம் | • (1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம் |
| 8. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | • (2016 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இலங்கை தேசிய ஆராய்ச்சிச் சபைச் சட்டம் |
| 9. தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் | • (1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டம் |
| 10. இலங்கை புதிய புத்தாக்குநர் ஆணைக்குழு | • (1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க) இலங்கை கைத்தொழில் கல்வி நிறுவகச் சட்டம் |
| 11. இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | • (1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க) அரச தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டம் |
| 12. இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம் | • (1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) மூன்றாம் கல்வி, தொழில்கல்வி சட்டம் |
| 13. தொழில்நுட்ப, விஞ்ஞான மற்றும் புத்தாக்கச் செயலகம் | • (1981ஆம் ஆண்டின் 55ஆம் இலக்கம்) இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சட்டம் |
| 14. மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு | • இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனச் சட்டம் (2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) |
| 15. தேசிய விஞ்ஞான மன்றம் | |
| 16. கோள்மண்டலக் காட்சிக்கூடம் | |
| 17. நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சி. கிளார்க் நிலையம் | |

(8) அவ்வறிவித்தலில் இல.“27.0 வர்த்தக அமைச்சர்” எனும் தலைப்பின் கீழுள்ள“04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்”தொடர்பில் பின்வருமாறு-

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை<br>2. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச<br>3. வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி<br>4. கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம்<br>5.அளவுக்கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்<br>6. உணவு ஆணையாளர் திணைக்களம்<br>7. இசைவு மதிப்பீடுகள் பற்றிய இலங்கை மதிப்பீட்டுச் சபை<br>8. இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகம்<br>9. மகாபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் | • (1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க) வியாபாரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம்<br>• (1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) அளவீட்டுக்கூறு நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம்<br>• (1946 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) நிறுவைகள்,அளத்தல்கள் கட்டளைச் சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க) மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் சட்டம்<br>• (2005ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க) இசைவு மதிப்பீடுகள் தொடர்பான இலங்கை மதிப்பீட்டுச் சபைச் சட்டம்<br>• (2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க) புலமைச் சொத்துக்கள் சட்டம் |

(9) அவ்வறிவித்தலில் இல.“28.3 பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச்சர்” எனும் தலைப்பின் கீழுள்ள “03. உரியதாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்” பின்வருமாறு-

**03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. மரப்பொருட்கள் ஆக்க நிலையம்<br>2. விதாதா நிலையம்<br>3. தேசிய அருங்கலைப் பேரவை<br>4. அபே கம - அலுவலக வளவு | • (1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவையுடன் ஒருங்கிணைந்த நிறுவனங்கள் சட்டம்<br>• (1996 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் ஒருங்கிணைந்த நிறுவனங்களுக்கான விசேட ஏற்பாட்டுச் சட்டம் |

(10) அவ்வறிவித்தலில் இல.“29.0 வெகுசன ஊடக அமைச்சர்” எனும் தலைப்புக்குப் பின்னர் கீழ்க்காணும் புதிய தலைப்பையும்அதன் கீழுள்ள “ 01. விடய எல்லை 02.கடமைகளும் பணிகளும் 03.அதிவிசேடமுன்னுரிமைகள் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்” என்பதைச் சேர்ப்பதன்மூலம்;

## 30.0 பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

### 01. விடய எல்லை

அனைத்துப் பிரசைகளும் பயம், அச்சம் இன்றி சுதந்திரமாக வாழ்வதற்குத் தகுந்த சூழலை உருவாக்குவதன்மூலம் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துதல்.

### 02. கடமைகளும் பணிகளும்

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாகவும் அரசினால் செயற்படுத்தப் படுகின்ற தேசிய கொள்கைகளுக்கு அமைவாகவும் "பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக" விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளுக்கு அமைய **"பொதுமக்கள் பாதுகாப்பு"** எனும் விடயத்துடன் தொடர்பான கொள்கையாக்கங்கள், தேசிய வரவு செலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி எனும் வேலைத்திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை ஆக்குதலும் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்.

### 03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் இலங்கை பொலிஸ் சேவையின் சேவை நிலையை மேம்படுத்துதல்.

2. கிராமப்புற சமூகங்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக சிவில் பாதுகாப்புத் துறையை மேம்படுத்துதல்.

3. சமூகத்தைப் போதைப்பொருள் ஆபத்திலிருந்து விடுவிக்கும் வேலைத்திட்டத்தைச் சமூக மட்டத்தில் போன்று பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பிள்ளைகள், அரச மற்றும் தனியார் வேலைத்தலங்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை சமயத்தலங்கள், சமூக அமைப்புகள், அரச மற்றும் தனியார் பிரிவுகளினூடாக நடைமுறைப்படுத்துதல்.

4. உள்ளகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கத்துடன் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தைத் தடுக்கத் தேவையான நவடிக்கைகளை எடுத்தல்.

5. மக்களின் வாழ்கையைப் பாதுகாத்துப் பேணிச்செல்வதற்காக கொள்ளையடித்தல், கொலை செய்தல், சமூக விரோத செயற்பாடுகள் மற்றும் குற்றங்களை ஒழித்தல் மற்றும் தடுத்தல்

6. நாட்டின் சகல பிரசைகளுக்கும் விசேடமாக பெண்கள் மற்றும் பிள்ளைகள் சுதந்திரமாக தங்களது வாழ்க்கையை மேற்கொண்டு செல்வதற்கு தேவையான பாதுகாப்பினை எந்நேரமும் பேணுதல்.

7. வாகனப் பாவனையின்போது வீதிகளில் இடம்பெறும் முறைகேடுகளைப் போன்று வீதி விபத்துக்களினால் ஏற்பாடும் மரணங்கள், உபாதைகள், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுதல் என்பவற்றைத் தடுப்பதற்காக மற்றும் முறையற்ற மற்றும் கவனயீனமான வாகனச் செலுத்துதல்கள், பாதைகள் மற்றும் சமிக்ஞைகளை மீறுதல் போன்று விசேடமாக நகர்புறப் பிரதேசங்களில் முறையற்ற வாகனச் செலுத்துதல்கள் மற்றும் பாதைகள் இருபுறமும் வாகனங்களை நிறுத்தி வைப்பதால் ஏற்படும் வீதி நெரிசல்களைக் குறைத்து முறையாக வாகனங்களை செலுத்தும் ஒழுங்குறுத்துகை முறையொன்று மற்றும் சட்டரீதியான அமைப்பொன்றை நடைமுறைப் படுத்துவதற்காகப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினை மீளத்திருத்தியமைத்து நவீன தொழில்நுட்ப மற்றும் திறமுறைகளைப் பயன்படுத்தி நவீனமயப்படுத்துதல்.

8. பல்வித செயற்பாட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக வறிய குடும்பங்களின் தொழில் மற்றும் வாழ்க்கைத்தரப் பங்களிப்பு அதிகரிக்கும்வண்ணம் வறுமையை ஒழிக்கும் பணிகளைப்போன்று ஏனைய அபிவிருத்தித் துறைகளுக்காகப் பல்வகைச் செயற்பாட்டு அபிவிருத்திச் செயலணியை ஈடுபடுத்துதல்.

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை பொலிஸ்<br>2. தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம்<br>3. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்<br>4. பல்செயற்பாட்டு அபிவிருத்திச் செயலணி திணைக்களம் | • ((1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) பொலிஸ் கட்டளைச் சட்டம்<br>• (2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டம் |

*11-441*